2010 ஏப்ரல் 27]

மட்டுமல்ல; இப்போது இருக்கின்ற பாராளுமன்றத் தொகுதியில் கூட அது அடங்கியது என்ற வகையிலே அரக்கோணத்திலே மேற்படி கலை அறிவியல் கல்லூரி அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் அடங்கியுள்ள வேலூர் மாவட்டத்தில் 3 அரசினர் கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. முத்துரங்கம் அரசுக் கலைக் கல்லூரி, வேலூர், அரசு திருமகள் ஆலைக் கல்லூரி, குடியாத்தம், அறிஞர் அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜாபேட்டை என 3 அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் இப்போது திருப்பத்தூரிலே ஒரு அரசுக் கலைக் கல்லூரியைக் கொடுப்பதாகவும் அரசு சொல்லியிருக்கிறது. ஆகவே, அதிகமாக நான்கு அரசுக் கலைக் கல்லூரிகள் ஒரு மாவட்டத்திலே இருப்பது மிகப் பெரிய விஷயம். மேலும், 8 அரசு உதவி பெறும் கல்லூரிகளும் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அந்த மாவட்டத்திலே 15 சுய உதவிக் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆக, இப்போது 26 கலைக் கல்லூரிகள் வேலூர் மாவட்டத்தில் இருக்கின்ற காரணத்தினால், இப்போது இந்தக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், substitute-க்கு supplementary கிடையாது. உட்காருங்கள்.

வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**103—**

## பணிமனை

***57525—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 27

வீரபாண்டி தொகுதி, வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை நகரில் அரசுப் போக்குவரத்து கிளை பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) சார்பில், இளம்பிள்ளை நகருக்கு சேலம், ராசிபுரம், எடப்பாடி, தாரமங்கலம் மற்றும் சங்ககிரி பணிமனைகள்மூலம் 27 பேருந்துகள் மட்டுமே இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளுக்கான பராமரிப்புப் பணிகள் அந்தந்த பணிமனைகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வீரபாண்டி தொகுதி, இளம்பிள்ளை நகரில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) சார்பில், பணிமனை தொடங்கும் திட்டம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, வீரபாண்டி ஒன்றியம், இளம்பிள்ளை முதல்நிலை பேரூராட்சி மிக அதிகமாக powerloom தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். அது வணிகச் சந்தை மையமாக உள்ளது. அங்கே மாண்புமிகு அமைச்சர் கூறியதுபோல ஈரோடு, ராசிபுரம், மேட்டூர், ஓமலூர் இப்படி முக்கிய கிராமங்களிலிருந்து மிக அதிகமாக தனியார் பேருந்துகளும், அரசுப் பேருந்துகளும், மினி பேருந்துகளும் வந்து செல்கின்றன. மற்ற பகுதிகளெல்லாம் அதிகமான தூரத்தில் இருக்கின்றன. சேலத்தில் ஒரு டெப்போ இருந்தாலும், ஓமலூர், தாரமங்கலம் இப்படி பல்வேறு பகுதிகள் இருக்கிற காரணத்தினாலும் 25 கிலோ மீட்டர் தூரம் இடைவெளி இருக்கிற காரணத்தினாலும், வருவாய் இழப்பைச் சரிக்கட்ட வாய்ப்பாக இருக்கும் என்று கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, இளம்பிள்ளை நகரப் பேருந்து நிலையத்திற்கு அருகிலேயே 4 ஏக்கர் கோயில் நிலம் உள்ளதால் இங்கே பணிமனை அமைக்க முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு ஆண்டுகளாக இதைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, 40 கிலோ மீட்டர் தொலைவு இருக்குமானால்தான் அடுத்த பணிமனை தொடங்கப்பட வேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறது. ஆனாலும் இப்போது ஆங்காங்கே பேருந்துகளுடைய எண்ணிக்கை அதிகமாகிவிட்ட காரணத்தால், இடம் இருக்குமானால், அந்த இடத்திலே தொடங்கலாம் என்ற ஒரு புதிய திட்டத்தை தமிழ்நாடு அரசு இப்போது அறிவித்திருக்கிறது. எனவே, அந்தக் கோயில் நிலத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரிய முறையில் வாடகைக்குப் பெற்றுத் தந்தால், அந்த வாடகையை நாங்களே கோயிலுக்குச் செலுத்துகிறோம். நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சரிடம் இந்த வருடம் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம். சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய பேருந்துப் பணிமனை அமைப்பதற்குரிய அனுமதியைத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம், அவர்களும் நிலைமைக்கேற்ப செய்து தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்து எங்களுக்கு, அந்த நிலத்தை வாங்கித் தந்தால், இந்த ஆண்டு உடனடியாகத் தொடங்குவதற்கு உரிய முயற்சி மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

*முற்பகல் 9—55*

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அந்த நிலத்தை எடுத்துக் கொடுப்பதற்கான முயற்சியை செய்து தருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனது ஓமலூர் பகுதியிலே அரசுப் பணிமனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அங்கு, ஓமலூர் விநாயகர் கோயில் நிலம் உள்ளது. 4 ஏக்கர் நிலத்திற்கான முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. போக்குவரத்துத் துறையும் அதை ஏற்றுக்கொள்ள சம்மதித்திருக்கிறது. இந்து சமய மற்றும் அறநிலையத் துறையும் அதைக் கொடுப்பதற்குச் சம்மதித்திருக்கிறது. நான் பேசும்பொழுது, மாண்புமிகு அமைச்சர் இதுகுறித்து

ஏற்கெனவே உறுதி கூறினார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தருகிறேன் என்ற உறுதியையும் நான் கொடுத்தேன். எனவே, இந்த ஆண்டிலே அந்த அனுமதியைக் கொடுத்து அந்த நிலத்திற்கான பணத்தை ஒதுக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஓமலூரிலே பணிமனை வாடகை இடத்திலே இருக்கிறது. அதைச் சொந்த இடத்திலே கட்டுவதற்கான முயற்சியை மாண்புமிகு அமைச்சர் மேற்கொள்வாரா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அந்த நிலத்திற்கான உரிய மதிப்பீட்டைச் சொல்லுமானால், அந்தத் தொகையைக் கட்டி, போக்குவரத்துத் துறையின் சார்பாகப் பணிமனை சொந்தமாகவே அமைக்கப்படும். அப்படி இல்லையென்றால், வாடகைக்குத் தந்தால்கூட, நாங்கள் வெளியிலேயே வாடகை தருகின்றபோது, கோயிலுக்கு வாடகை தருவதிலே எங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லை. அரசுக்கு அரசுதானே கொடுக்கிறோம். எனவே, வாடகைக்குத் தந்தாலும் அந்த இடத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு முயற்சி எடுத்துத் தாருங்கள். இந்த ஆண்டே நிச்சயமாக அந்தப் பணிமனையை அங்கு அமைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றிலேயே சிறப்புமிக்க, ஏன்! இந்திய வரலாற்றிலேயே இனி இப்படிப்பட்ட புதிய வரலாறு படைக்க முடியாத அளவிற்கு சிறப்பான, எழிலார்ந்த இந்தச் சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலகத்தைக் கட்டிய மாண்புமிகு முதல்வருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்புமிக்க இந்தச் சட்டப் பேரவையில் எனது குரலையும் எதிரொலிக்க இன்று வாய்ப்புத் தந்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 27]

எனது தொகுதியிலே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பணிமனை தருவதாக அறிவிக்கப்பட்டது. குறிப்பாக தாலுகா அந்தஸ்து இல்லாத நகரங்களுக்குப் பணிமனை தருவது கிடையாது. அதனால், அந்த விதியைத் தளர்த்தி, எனது கோரிக்கையை ஏற்று, நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று, அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. அந்தப் பணிமனை இன்னும் தொடங்கப்படவில்லை. அது எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோதே, தன்னுடைய அமைச்சரைப் பார்த்து நன்றி சொல்லிவிட்டுப் பேசுகிறார். அவர் சொன்னார், அந்த இடம் இந்து சமய மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமானது, அதைப் பதிவு செய்வதற்குரிய கட்டணம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அதற்கு பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு கோரி அனுமதிக்குக் காத்திருக்கின்றது. அனுமதி கிடைத்தவுடன், அந்த இடத்தைப் பெற்று நிச்சயமாகப் பணிமனை தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி.

**திருமதி பெ. பிரபாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை மறுநாள் நம்முடைய துறையின் மானியக் கோரிக்கை இருக்கிறது. அதிலே இந்த விவரங்கள் உங்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

[2010 ஏப்ரல் 27

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கரில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்கவேண்டும் என்பது தொகுதி மக்களின் நீண்ட ஆண்டு கோரிக்கையாகும். ஏற்கெனவே பல முறை நான் இந்த மாமன்றத்திலே பதிவு செய்திருக்கின்றேன். கடந்த முறைகூட சட்டமன்றத்திலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் நிதி தரத் தயாராக உள்ளாரா என்று கேட்டார். நான் தரத் தயாராக உள்ளேன் என்று சொன்னேன். ஆனால், இன்றுவரை பணிமனை கிடைக்கவில்லை. ஏற்கெனவே, இதற்காக சோளிங்கரிலே 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இடம் தயாரான நிலையில் உள்ளது. வருவாய்த் துறை பட்டா வழங்கவில்லை என்ற ஒரு காரணத்தைச் சொல்லுகின்றார்கள். அதற்கு மாற்று இடமும் தரத் தயாராக இருக்கின்றோம். தமிழக அமைச்சரவையிலேயே ஓர் இளம் அமைச்சராக, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கருணையோடு, கனிவோடு கேட்டுக்கொள்கிறேன். கண்டிப்பாக இதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தங்கள் பகுதியிலே ஒரு பணிமனை அமைக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. ஆனால், 40 கிலோ மீட்டர் இடைவெளிக்குத்தான் ஒரு பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்ற அரசாணை இருக்கிறது. அதையெல்லாம் மீறி ஒவ்வொரு இடத்திலும் தேவைக்கேற்ப புதிய பணிமனைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக, இந்தியாவிலேயே மிகக் குறைவான கட்டணத்தில் இயங்குவது நமது போக்குவரத்துக் கழகம் என்ற காரணத்தால், பணிமனை அமைப்பதற்கோ அல்லது மற்ற தேவையான செலவுகளைச் செய்வதற்கோ பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. போக்குவரத்துக் கழகத்திற்குச் செலவு செய்யக்கூடிய வசதி இல்லை. அதனால்தான் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை நீங்கள் தாருங்கள், நாங்கள் செய்து தருகிறோம் என்று சொன்னோம். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி

2010 ஏப்ரல் 27]

மேம்பாட்டு நிதியை இந்தத் துறைக்குச் செலவு செய்யக்கூடிய அனுமதி இல்லை. இந்த ஆண்டு நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி அளிப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். எனவே, இன்னும் ஓரிரு வாரங்களில் அரசாணை வந்துவிடும். உங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த ஆண்டே சோளிங்கரில் இந்தப் பணிமனை அமைக்கப்படும்.

முற்பகல் 10—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகம், மதுரைக் கோட்டம் 2, திசையன்விளையில் பணிமனை புதிதாகக் கட்டுவதற்கு, திசையன்விளை பேரூராட்சிக்குச் சொந்தமான 3 ஏக்கர் நிலம் கிரயம் வாங்கப்பெற்று, தற்போது நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 2—க்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் பணிமனை கட்டுகின்ற பணி இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து, திருநெல்வேலி மாவட்டம், அரசுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம் 2—க்குச் சொந்தமான, திசையன்விளை பேரூராட்சியால் கொடுக்கப்பட்டிருக்கின்ற 3 ஏக்கர் நிலத்தில் பணிமனையைப் புதியதாகக் கட்டித் தருவீர்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 ஆம் ஆண்டு போக்குவரத்துக் கழகங்களில் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 16,000. இப்போது போக்குவரத்துக் கழகங்களுடைய மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 20,272. ஒவ்வொரு இடத்திலும் 50 பேருந்துகள், 60 பேருந்துகள் நிறுத்தக்கூடிய இடம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்தது. இப்போது அங்கெல்லாம் பேருந்துகள் அதிகமாகிவிட்ட காரணத்தால் இடம் அங்கு சிரமமாக இருக்கிறது.

[2010 ஏப்ரல் 27

40 கிலோ மீட்டர் என்பதைச் சுருக்கி, குறைவாக்கி, 30 கிலோ மீட்டருக்கு ஒரு பணிமனை அமைக்கலாமா என்கிற கருத்துருவைத் துறையிலே பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று அதை இந்த ஆண்டு நிறைவேற்றுவதற்காக துறை முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அதேநேரத்தில், போக்குவரத்துக் கழகங்கள் செலவு செய்யக்கூடிய நிலையில் இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திசையன்விளைக்கு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்றால், ஒரு பணிமனைக்கு 40 இலட்சம் ரூபாய் செலவாகிறது, நீங்கள் ஒரு பாதித் தொகையைத் தந்தால், மீதித் தொகையைத் துறையே ஏற்றுக்கொண்டு, எங்கெங்கெல்லாம் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறீர்களோ தகுதி இருக்குமானால், அந்த இடத்தில் பணிமனை ஆரம்பிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**104—**

**கால்நடை மருத்துவமனை**

***87244—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், சேரகுளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேரகுளத்தில் தற்போது கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

VAIMAIYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS